செய்தி வெளியீடு எண்: 21 நாள்: 09.07.2019

***தேனி மாவட்டம்***
***ஜல் சக்தி அபியான் - 2019 இயக்கத்தின் கீழ்***
***நீர் மேலாண்மை திட்டப்பணிகள் குறித்து***
***அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்***
***தலைமையில் நடைபெற்றது :-***

**********

தேனி மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ஜல் சக்கி அபியான் - 2019 இயக்கத்தின் கீழ் நீர் மேலாண்மை திட்டப்பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேற்று (08.07.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தேனி மாவட்டத்தில் 2018-19 ஆம் நிதியாண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.879.33 இலட்சம் மதிப்பீட்டில் 226 குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீர் மேலாண்மை தொடர்பாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சி பகுதிகளில் குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில் 320 பண்ணைக் குட்டைகள் மற்றும் 567 தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன.

மேலும், 65,069 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. 13 சிறு குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுப்பணித்துறையின் மூலம் 78 கண்மாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான 90 குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன. மேலும், நீர்நிலைப் புறம்போக்குப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, நீர்தேக்க அமைப்புகள், ஓடைகள், கால்வாய்கள் மீட்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசு ஜல் சக்தி அபியான் என்ற இயக்கத்தின் கீழ் நீர் மேலாண்மையினை மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது. இவ்வியக்கத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு மற்றும் தண்ணீர் பாதுகாப்பு போன்ற நீர் மேலாண்மை பணிகள் நாடு முழுவதும் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது. ஜல் சக்தி அபியான் இயக்கத்தின் ஊரக வளர்ச்சி, வேளாண்மை, பொதுப்பணி, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை போன்ற பிற துறைகளையும், அனைத்து ஊராட்சி அமைப்புகளையும் ஒருங்கிணைத்து நீர் மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஜல் சக்தி இயக்கத்தின் மூலம் நாடு முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளவையாக 254 மாவட்டங்களும், தமிழ்நாட்டில் 27 மாவட்டங்களும், 165 ஒன்றியங்களும், 5135 கிராம ஊராட்சிகளும் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் 297 வருவாய் குறுவட்டங்கள், நகர்ப்புறப் பகுதிகளில் 244 வருவாய் குறுவட்டங்களும், நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 2024-ம் வருடத்திற்குள் அனைத்து வீடுகளுக்கும் பொதுக்குழாய் / தனிநபர் குழாய் மூலமாக தண்ணீர் வழங்குவது இவ்வியக்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட இராஜதானி, கண்டமனூர் குறு வட்டங்களும் மற்றும் உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட தேவாரம் மற்றும் ஏரசக்கநாயக்கனூர் வருவாய் குறுவட்டங்களும் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளவையாக கண்டறியப்பட்டுள்ளன.

ஜல்சக்தி அபியான் இயக்கத்தின் கீழ் தண்ணீரை பாதுகாத்தல் மற்றும் மழை நீர் சேகரித்தல், பாரம்பரியமான நமது நீர்நிலைகள், குளங்களை சீரமைத்தல், ஆழ்துளை கிணறுகளை மீளப்பயன்படுத்துதல் மற்றும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்றுதல், நீர்பிரிமேடு மேலாண்மை மற்றும் தீவிர காடு வளர்ப்பு போன்று ஐந்து வகையான செயல்பாடுகளை செய்தி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஊரக பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் இயற்கை வளங்களை மேம்பாடு பணிகளான தடுப்பணைகள் அமைத்தல், தண்ணீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் மழைநீர் மீள் நிரப்பு அமைப்புகள் அமைத்தல், ஊரக பகுதிகளில் உள்ள குளம், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை தூர்வாருதல், மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் மற்றும் தீவிர மரக்கன்றுகள் நடும் பணிகள் ஆகியவற்றை எடுத்துச் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில், அரசு கட்டடங்கள், தனிநபர் இல்லங்கள் மற்றும் வணிக வளாகக் கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவி, மழைநீர் முழுமையாக சேகரித்திடவும், நீரை மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறைந்த இடைவெளியில் அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகள் (மியாவாக்கி முறையில்) நடவு செய்து தொடர்ந்து பராமரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜல்சக்தி அபியான் இயக்க திட்டப்பணிகள் மாவட்டங்களில் செயல்படுத்தபடுவதை கண்காணித்திட மத்திய அரசால் பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மூன்று கட்டங்களாக மாவட்டத்திற்கு வருகை தந்து நடைபெறும் பணிகளை ஆய்வு செய்து மத்திய அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளனர்.

மாவட்டத்தில் ஜல் சக்தி இயக்கத்தை மக்களின் இயக்கமாக முழு முனைப்புடன் செயல்படுத்திட தன்னார்வலர்கள், ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்பினர். முழு சுகாதார ஊக்குநர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் பங்கு கொள்ள செய்து, அனைத்துத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஜல் சக்தி இயக்கத்தை முழுமையாக செயல்படுத்தி தேனி மாவட்டத்தை தண்ணீர் பற்றாக்குறை இல்லாத மாவட்டமாகவும், நீர் மேலாண்மையின் முழுமைபெற்ற மாவட்டமாகவும் மாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சிததலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் எஸ்.கௌதம், இ.வ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பா.திலகவதி, செயற்பொறியாளர் எஸ்.கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) சுப்புராம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சி.முருகன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) விஜயலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி மாவட்டம்.**